மார்ச் - 13

**"ஆகையால், நம்மில் தேறினவர்கள் யாவரும் இந்தச் சிந்தையாயிருக்கக்கடவோம்; எந்தக் காரியத்திலாவது நீங்கள் வேறே சிந்தையாயிருந்தால், அதையும் தேவன் உங்களுக்கு வெளிப்படுத்துவார். ஆகிலும் நாம் எதுவரையில் தேறியிருக்கிறோமோ, அதுமுதல் ஒரே ஒழுங்காய் நடந்துகொண்டு, ஒரே சிந்தையாயிருப்போமாக".**

**- பிலி 3 : 15, 16.**

பூரண அன்பின் இலக்கை அடைந்திருக்கிறவர்கள் தங்களுடைய ஜீவனையும் சகோதரர்களுக்காகக் கொடுத்து கர்த்தரின் ஊழியத்தில் சுறுசுறுப்பாக ஈடுபட்டிருப்பது அவர்களுக்கு மிகவும் அவசியமாயிருக்கிறது. அப்படிப்பட்டவர்கள் தேவனின் பிரதிநிதிகளாகவும் நீதியின் தத்துவங்களின் பிரதிநிதிகளாகவும் மாத்திரம் நில்லாமல், அவர்களும் அவ்வாறே "இலக்கை" அடையத்தக்கதாகப் பந்தய ஓட்டத்திலுள்ள மற்ற ஓடுகிறவர்களை திடப்படுத்துவதில் தயாராகவும், இஷ்டமுள்ளவர்களாகவும், சாமார்த்தியமுள்ளவர்களாகவும் இருக்கத்தக்கதாகக் கர்த்தரிலும், அவருடைய பெலனின் வல்லமையிலும் அவருடைய வார்த்தையிலும் விசுவாசத்திலும் வல்லவர்களாயிருக்கிறவர்களுக்கு பிரதிநிதிகளாக நிற்க வேண்டும். **-Z '01, 10 (R 2753).**

கடந்த காலத்தின் குண ஆற்றல்கள் தற்கால அபிவிருத்திக்கும் வருங்காலத்துக்குரிய வாக்குத்தத்தத்துக்கும் ஆதாரமாக இருக்கின்றன. நாம் ஏற்கனவே அடைந்திருக்கிறவைகளை உண்மையாய் உபயோகிப்பதின் பலனாய் மேலும் வளர்ச்சி ஏற்படும். யாருடைய இருதயம் பூரணமாக தேவனில் திடனாயிருக்கிறதோ, அவர்களுடைய இருதயத்தின் மனோபாவம் இதுதான். ஊழியத்திலோ, அறிவிலோ அல்லது கிருபையிலோ எதுவாகிலும் குறைவுள்ளவர்களாயிருந்தால், அப்படிப்பட்ட குணம், ஊழியத்திலும், அறிவிலும், கிருபையிலும் அதிகமாக வளர்வதுக்குரிய ஆசிர்வாதத்துக்கு சரியானதும் தகுதியானதுமாகத் தேவனால் அங்கீகரிக்கப்படும். அதை அவர் ஏற்ற காலத்தில் கொடுப்பார். **-P '30, 30.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

யோபு 1:1; சங் 37:37; மத் 5:48; 19:21; 1கொரி 2:6; 14:20; 2கொரி 13:11; எபே 4:11-13; கொலோ 4:12; எபி 5:14; 1பேது 5:10; கலா 5:10; ரோம 12:16; 15:5; பிலி 2:2; 4:2; கலா 6:16.

**கோபுர வாசிப்பு : Z '08, 183 (R 4188).**

**வினாக்கள் :** இந்த வாரத்தில் இந்த வசனத்தின் புத்திமதிகளை அப்பியாசிக்க முயற்சித்தேனா? பலன் என்ன?